



ஞாநி

**நடுத்தர வர்க்கம் தன் மனசாட்சியை இழந்துவருகிறது**

இதழியலாளர், எழுத்தாளர், அரசியல் விமர்சகர், நாடக ஆசிரியர், நாடக நடிகர், குறும்படங்களை இயக்கியவர் எனப் பல முகங்கள் ஞாநிக்கு இருந்தாலும் அவை எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது அவரது போர்க்குணம்தான். அதிகாரத்தில் இருப்பவர்களை விமர்சிக்கவோ பிரச்சினைகளின் அடிப்படையில் அவர்களை எதிர்க்கவோ சிறிதும் தயங்காதவர். இந்தப் போர்க்குணத்தினால் ஏற்படும் பிரச்சினைகளைக் கண்டு அஞ்சித் தன் கருத்தையோ செயல்பாட்டையோ மாற்றிக்கொள்ளாதவர்.

சென்னையின் போக்குவரத்துப் பிரச்சினைகள் பற்றியும் சென்னையிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படும் அடித்தட்டு மக்கள் பற்றியும் தொடர்ந்து எழுதிவருபவர்.

கடந்த 37 ஆண்டுகளாகச் சென்னையில் வசித்துவரும் ஞாநியைக் கலைஞர் கருணாநிதி நகரில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்துச் சென்னை நகரம் குறித்த அவரது அனுபவங்களையும் பார்வைகளையும் பற்றி உரையாடினோம்.

**நீங்கள் எப்போது சென்னைக்கு வந்தீர்கள் ? ஏன் வந்தீர்கள் ?**

என் 21ஆவது வயதில் சென்னைக்கு வந்தேன். இப்போது என் வயது 57. என் சொந்த ஊர் செங்கல்பட்டு. நான் பிறந்து வளர்ந்தது, படித்தது எல்லாம் செங்கல்பட்டில்தான். தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியில் பி.ஏ. ஆங்கில இலக்கியம் சேர்ந்தேன். அப்போது செங்கல்பட்டிலிருந்து சென்னைக்கு ரயிலில்தான் போய் வந்துகொண்டிருந்தேன். அப்போதைய தாம்பரத்திற்கும் இப்போதைய தாம்பரத்திற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. இப்போது தாம்பரம் ஒரு தனி நகரம் மாதிரி மாறிவிட்டது. நேற்று தான் தாம்பரத்தில் ஒரு திருமணத்திற்காகப் போயிருந்தேன். காலேஜ் படித்த காலத்தில் இருந்த தாம்பரம் ஒரேயடியாக மாறிவிட்டது. அடையாளமே தெரியவில்லை.

படிப்பை முடித்துவிட்டு, வேலைக்குப் போனபோதும் செங்கல்பட்டிலிருந்துதான் சீசன் டிக்கெட் எடுத்து வந்துகொண்டிருந்தேன். இன்றும்கூட சீசன் டிக்கெட் எடுத்துக் கொண்டு சென்னைக்கு வந்து செல்பவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அப்போதெல்லாம் சப்-அர்பன் ரயில் கிடையாது, எலக்ட்ரிக் டிரையின் கிடையாது. அப்போது செங்கல்பட்டுக்கும் தாம்பரத்திற்கும் நடுவில் ஒரே ஒரு ரயில் பாதைதான் இருந்தது. காஞ்சிபுரத்திலிருந்து

சென்னைக்கு வருபவர்கள், காஞ்சிபுரத்திலிருந்து செங்கல்பட்டு வந்து, அங்கிருந்து சென்னைக்கு வர வேண்டும். அப்போது இரண்டு ரயில்கள் இருந்தன. காஞ்சிபுரத்திலிருந்து சென்னை , பீச் வண்டி. இதற்கு ஆஃபீசர்ஸ் டிரையின் என்றே பெயர். இதில்தான் நிறைய புறநகர்ப் பயணிகள் வருவார்கள். தவிர, செங்கல் பட்டிலிருந்தே புறப்படும் ஒரே ஒரு ரயில் உண்டு. அரக்கோணம் பகுதியிலிருந்து சென்ட்ரலுக்கு வருபவர்கள் உள்ளூர்ப் பயணிகள் வண்டிகளில்தான் வர வேண்டும்.

என் அப்பா பத்திரிகைக்காரர். இந்தியன் எக்ஸ்பிரஸில் பணி புரிந்துவந்தார். 1973இல் ஓய்வு பெற்றுவிட்டார். அதற்கு முன் 45 வருடங்கள் அவர் வந்து போய்க்கொண்டிருந்தார். அவர் சீசன் டிக்கெட் பயணிகள் சங்கம் ஒன்றை ஆரம்பித்தார். இந்தியாவில் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட முதல் சங்கம் இது தான். அவருக்கு எல்லாத் தலைவர்களிடமும் பரிச்சயம் உண்டு. ராஜாஜி, காமராஜையெல்லாம் தெரியும். அண்ணாதுரைக்கு காலேஜ் மெட்டாக இருந்தவர். இதனால், ஆண்டுதோறும் செங்கல்பட்டில் சீசன் டிக்கெட் பயணிகள் சங்கத்தின் ஆண்டு விழாவின்போது இவர்களில் யாரையாவது கூப்பிடுவார். ஒருமுறை கலைஞர் வந்திருந்தார். அவர் சங்கத்தின் பெயரைப் பருவச் சீட்டுப் பயணிகள் சங்கம் என்று மாற்றினார்.

**சென்னைக்கே குடிவந்தது எப்படி?**

பட்டப்படிப்பை முடித்தவுடன் வேலை தேடத் தொடங்கிவிட்டேன். அப்பா எக்ஸ்பிரஸ் பத்திரிகை அதிபர் ராம்நாத் கோயங்காவுடன் ரொம்ப நெருக்கமாக இருந்தார். ஆனாலும் எனக்கு அங்கு வேலை வாங்கித் தர முடியவில்லை. அப்போது எங்கு வேலை இருந்தாலும் சிபாரிசு செய்தால்தான் வேலை கிடைக்கும் என்ற நிலை இருந்தது. 1970களில் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகமாக இருந்தது. அப்பாவுக்கு ஆபீசில் ரொம்பக் கறாரான பேர்வழி என்ற பெயர் இருந்தது. இதனால் நான் அங்கு வந்துவிடக் கூடாது என்றே நிறைய பேர் நினைத்தனர். ஒரே ஒரு இடம் காலியாக இருந்தது. நான் அதில் சேர்ந்தேன். அது, விளம்பரப் பிரிவில் அட்டெண்டர் வேலை. பத்து மாதங்கள் அங்கு வேலை பார்த்தேன். ஒவ்வொரு மாதமும் மேனேஜ்மென்ட்டுக்கு லெட்டர் எழுதி என்னை ஜர்னலிஸ்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வேன். அவர்களும் கண்டு கொள்ளாமலேயே இருந்தனர். 10 மாதங்களுக்குப் பிறகு நான் ராஜினாமா செய்துவிட்டேன்.

இந்தக் காலகட்டத்திலும் நான் செங்கல்பட்டிலிருந்து ரயிலில்தான் வந்துகொண்டிருந்தேன். எக்மோரில் இறங்கி அங்கிருந்து ஸ்பென்சருக்கு பஸ்ஸில் போக வேண்டும். அந்தச் செலவை மிச்சப்படுத்துவதற்காக நடந்துவிடுவேன். அந்த வழியில்தான் அரசு ஆண்கள் கலைக் கல்லூரி இருந்தது. இப்போது அது காயிதே மில்லத் பெண்கள் கல்லூரியாக உள்ளது. அப்போது பச்சையப்பன் கல்லூரி போலவே புகழ்பெற்று விளங்கியது. ஏதாவது பிரச்சினை என்றால், ஆர்ட்ஸ் காலேஜ் மாணவர்கள் களத்தில் இறங்கி விடுவார்கள். மவுன்ட் ரோட் முழுவதும் ஸ்தம்பித்துவிடும். எனவே, அரசு திட்டமிட்டு அந்த காலேஜை நந்தனத்துக்கு மாற்றிவிட்டு, அதைப் பெண்கள் கல்லூரியாக மாற்றியது.

வேலையை ராஜினாமா செய்துவிட்டு, மெட்ராஸ் யுனிவர்சிட்டியில் ஜர்னலிசம் கோர்ஸ் ஒன்றில் சேர்ந்தேன். அதை முடித்தவுடன் 1975 ஆம் வருடம் இந்தியன் எக்ஸ்பிரசிலேயே ரிப்போர்ட்டர் வேலைக்கு விண்ணப்பித்து, சேர்ந்துவிட்டேன். எனக்கும் என் அப்பாவுக்கும்

கருத்து வேறுபாடு ஏற்பட்டது. வீட்டை விட்டு வெளியே வருவது என்று முடிவு செய்துவிட்டேன். என் அப்பாவுக்கு இரண்டு மனைவிகள். நான் இரண்டாவது மனைவியின் மகன். எல்லோரும் குழந்தையிலிருந்தே ஒன்றாகத்தான் வளர்ந்தோம். என் கூடப் பிறந்தவர்கள் அனைவருமே என் அப்பாவின் மூத்த தாரத்துப் பிள்ளைகள்தான். என் அம்மாவுக்கு நான் ஒரே பையன். என் அம்மாவுக்கு சொந்தத் தாய் மாமன் என் அப்பா. அவரை வளர்த்ததே என் அம்மாவின் அப்பாதான். என் சகோதரர்கள் எல்லோரும் சென்னையிலும் ஹைதராபாத்திலும் இருந்தனர்.

1974இல் அவர்கள் தங்கள் அம்மாவைச் சென்னைக்குக் கூட்டிக் கொண்டு போகலாம் என்று முடிவு செய்து, என்னிடம் பேசினார்கள். நானும் சரி என்று கூறிவிட்டேன். வீட்டில் இருந்தது என் அப்பா, அம்மா, நான், என் பெரியம்மா. அந்தச் சமயத்தில் என் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பிரச்சினை ஏற்பட்டது. எனவே, நான் அம்மாவையும் அவரது அக்காவையும் 1975 அக்டோபர் மாதம் சென்னைக்குக் கூட்டி வந்துவிட்டேன். என் சகோதரர்களும் என் பெரியம்மாவும் சாலிகிராமத்தில் இருந்தனர். அவர்களுடன் இன்றுவரை எனக்கு சுமுகமான உறவே இருந்துவருகிறது.

**நம் சென்னையில் எங்கே தங்கினீர்கள் ?**

இப்போது உள்ள எஸ்.எஸ்.ஆர். பங்கஜம் தியேட்டருக்கு அப்போது ராஜேந்திரா என்று பெயர். ராஜேந்திரா தியேட்டரைத் தாண்டி, காவேரி அன்பு நகர் என்ற ஒரு இடம் இருந்தது, இப்போது இல்லை. அங்குதான் அவர்கள் குடியிருந்தார்கள். பத்து நாட்களுக்கு ஒரு முறை அவர்கள் எல்லோரையும் போய்ப் பார்த்து விட்டு வருவேன். அப்போதெல்லாம் வடபழனி பஸ் நிலையத்தில் இறங்கி, நடந்து தான் வர வேண்டும். இரண்டு மூன்று ஸ்டூடியோக்கள் மட்டும் இருக்கும். 'பிரசாத் வந்தாச்சு, அருணாச்சலம் வந்தாச்சு' என்று நினைத்துக்கொண்டே நடந்து செல்வேன். கடைசியில், 'அப்பாடா... ராஜேந்திரா வந்தாச்சு' என்று நிம்மதியாக இருக்கும். பாதையின் இரண்டு பக்கங்களிலும் கட்டடங்களே இருக்காது. முழுவதும் பொட்டல் வெளி.

இங்கு வந்து குடியிருப்பதில் பெரிய பிரச்சினை வாடகைதான். என் அப்பா அத்தனை வருஷம் சென்னையில் வேலை செய்தும் செங்கல்பட்டிலேயே தங்கியிருக்கக் காரணம் இங்கே வாடகை கொடுத்துக்கொண்டு அத்தனை பேரும் வாழ முடியாது என்பதால்தான். கீழ்ப்பாக்கத்தில் உள்ள டெய்லர்ஸ் ரோட் தாண்டி ஹால்ஸ் ரோட் என்ற ஒரு சாலை வரும். அதில் ஒன்றாம் நம்பர் வீட்டில்தான் நான் குடியேறினேன். அந்த வீட்டுக்கு வாடகையே 100 ரூபாய். என் சம்பளம் 120! என்னுடன் காலேஜில் படித்த என் நண்பர் அன்பு ஜேம்ஸ் சுந்தரராஜனுக்கு இந்தியன் வங்கியில் வேலை கிடைத்தது. அவர் தனியாக வீடு பார்க்காமல் எங்களுடனேயே பேயிங் கெஸ்டாக இருந்தார். அப்படித்தான் எங்கள் வாடகைப் பிரச்சினையைச் சமாளித்தோம்.

**அந்த வயதில் சென்னையில் உங்களுக்கு மிகவும் பிடித்த இடங்கள் எவை?**

சென்னையில் என்னை மிகவும் கவர்ந்தவை இரண்டு விஷயங்கள். ஒன்று பரந்து விரிந்த பீச். இரண்டாவது நாடகங்கள், இசை நிகழ்ச்சிகள் போன்றவை. அப்போது சென்னையில் கிருஷ்ணகான சபா, வாணி மஹால், நாரத கான சபா, மியுசிக் அகாடமி, மைலாப்பூர் அகாடமி போன்ற நூற்றுக்கும் மேற்பட்ட சபாக்கள் இருந்தன. அது சபாக்களின் பொற்காலம் என்று கூறலாம். கட்டணம் இரண்டு, மூன்று ரூபாயில் தொடங்கி, எட்டு ரூபாய் பத்து ரூபாய்வரை இருக்கும்.

மூன்று வருடங்களில் என் நண்பருக்குத் திருமணம் ஆகிவிட்டது. அதுவரை அவர் எங்களுடன்தான் இருந்தார். பிறகு அங்கிருந்து காலி செய்துவிட்டு மாம்பலத்தில் காந்தி தெருவில் குடியேறினோம். காந்தி தெரு மாம்பலத்துக்குள்ளேயே இருந்த குடிசைப் பகுதி. பிறகு கோதண்ட ராமர் கோவில் தெருவில் குடியேறினோம். 1975 முதல் 77வரை இப்படி மாறி மாறி இருந்தோம். அப்போது அரசாங்கத்தில் பத்திரிகையாளர்களுக்காகக் குடியிருப்புகளை ஒதுக்கியிருந்தார்கள். 1975 இல் வேலையில் சேர்ந்தவுடனேயே பத்திரிகையாளர் குவாட்டர்ஸில் இடம் கேட்டு விண்ணப்பித்திருந்தேன். எமர்ஜன்சியின் போது எந்த விதமான குறுக்கீடும் இல்லாமல், வரிசைக் கிரமமாக ஒதுக்கீடுகளைச் செய்தார்கள். அதன்படி எனக்கு பீட்டர்ஸ் சாலையில் உள்ள பீட்டர்ஸ் காலனியில் குவாட்டர்ஸ் கிடைத்தது.

**சென்னை மக்களின் பழக்க வழக்கங்கள், நடத்தை பற்றி உங்கள் கருத்து என்ன ?**

சென்னையின் மக்கள், அவர்களுடைய பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி வேறு ஊர்களிலிருந்து வருபவர்களுக்குப் பல தவறான கண்ணோட்டங்கள் இருக்கின்றன. இங்குள்ளவர்கள் அந்தளவு நட்புணர்வுடன் இருப்பதில்லை என்று கூறுவது தவறு. சென்னையில் வாழ்வது கஷ்டம் என்பதுபோன்ற ஒரு தோற்றத்தைத் தங்கள் கதைகளில் எழுதுபவர்களைத் தங்கள் சொந்த ஊ ருக்குப் போகச் சொன்னால், அங்கு போய் அவர்களால் இரண்டு நாட்கள்கூடத் தங்க முடியாது. அவரவர் ஊரில் இருக்கும் போது, அந்த ஊரில் எல்லோருக்கும் எல்லோரையும் தெரியும். அந்தச் சூழலில் ஒரு பாதுகாப்பு உணர்வு ஏற்பட்டுவிடுகிறது. இங்கு அதற்கு வாய்ப்பில்லை. புதிதாக எந்த ஒரு இடத்திற்குப் போனாலும் ஏற்படுவதுதான் இது. கிராமங்களில் அவரவர் ஜாதியை வைத்துத்தான் பழக்கம் ஏற்படுத்திக் கொள்வார்கள். 'இங்க நம்மாளுங்க இல்லப்பா' என்று சில இடங்களைப் புறக்கணிப்பதும் உண்டு. ஆனால், நகரங்களில் இப்படி இல்லை. ஒரு குறிப்பிட்ட பிரிவினருடன்தான் வாழ வேண்டும் என்றால் இங்கே வாழவே முடியாது. ஒருவரை ஒருவர் சார்ந்துதான் வாழ முடியும் என்கிற கட்டாயம் இங்குள்ளது.

**சென்னையின் பொதுவான பண்பாடு பற்றி...**

மற்ற ஊர்களிலிருந்து வந்தவர்கள் கொண்டுவந்த பழக்க வழக்கங்கள்தான் இங்கே நிறைய உள்ளன. மூலைக்கு மூலை அம்மன் கோவில், பிள்ளையார் கோவில்கள் ஆகியவற்றில் நடைபெறும் திருவிழாக்கள் எதுவுமே சென்னைக் கலாசாரம் என்று கூற முடியாது. ஒரு பகுதியில் திருவிழா என்றால், அங்கு நெருக்கமாகப் போய் கவனித்தால், அதை எடுத்து நடத்துபவர்கள் திருநெல்வேலிக் காரர்களாக இருப்பார்கள். இன்னொரு பகுதியில் விருது நகர்க்காரர்களாக இருப்பார்கள். இங்கேயே பாரம்பரியமாக நடை பெற்று வரும்

திருவிழாக்கள் என்று எடுத்துக்கொண்டால், பெரிய கோவில்களில் நடைபெறும் விழாக்களைச் சொல்லலாம். உதாரணமாக, அறுபத்து மூவர், திருப்பதி கொடை போன்ற மெகா விழாக்கள் இருந்திருக்கின்றனவே ஒழிய, ஊரிலிருந்து கொண்டு வந்த பழக்கங்களான திருவிழாக்கள் எல்லாமே 1970 களுக்குப் பிறகுதான் நடைபெற்றன. இங்கே அவர்கள் வந்து தங்கள் வர்த்தகத்தில் காலூன்றி நன்றாகச் சம்பாதிக்கத் தொடங்கிய பின்னர் தான் இவை தொடங்கின.

ஜாதியைப் பொருத்தவரை இங்கே நான்கு ஜாதியினர் தான் செல்வாக்கு செலுத்தி வந்தனர். முதலியார்கள், நாயக்கர், பிராம்மணர்கள், தலித்துகள். இவர்கள் அனைவரும் தமிழ் பேசுபவர்கள். இவர்களைத் தவிர, ஆந்திராவிலிருந்து வந்த நாயுடுக்கள்.

**சென்னையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி...**

சென்னையில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டது 90களில்தான். நான் உணர்ந்த மாற்றம் என்று சொல்லப் போனால் அரசு, நிர்வாகம், புதிதாக நிறைய பேர் பணக்காரர்களானது போன்றவைதான். பணப் புழக்கம் அதிகரித்தது. புதிய தொழில்கள், வேலை வாய்ப்புகள், கட்டடங்கள், கேளிக்கை ஆகியவை கடந்த 20 வருடங்களில் அதிகமாக உள்ளன.

**சென்னையின் வளர்ச்சி பற்றி உங்கள் கருத்து என்ன ?**

சென்னை நகரத்தின் வளர்ச்சி சென்னையின் உள்ளூர் நிலவரங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு செய்யப்படுவதாகத் தெரியவில்லை. பஸ் நிறுத்தத்தை எடுத்துக்கொள்வோம். அமெரிக்காவிலோ, லண்டனிலோ இருப்பதைப் போலவேதான் இங்கும் டிசைன் செய்கிறார்கள். இங்குள்ள தேவைகளுக்கு இது பொருத்தமா, இங்கு இது தேவையா என்பன பற்றிய பார்வையே இருப்பதில்லை. அங்கெல்லாம் மக்கள் தொகை மிகவும் குறைவு. ஐந்து பேர் காத்துக்கொண்டிருந்தாலே பெரிய விஷயம். அங்கே, காத்திருப்பவர்களுக்காக வட்டமாக ஐந்து சீட்கள் வைத்திருப்பார்கள். இங்கேயும் அதே ஐந்து சீட்கள் இருந்தால், எப்படி சரிப்படும்? அதுவும் அங்கே இருப்பதைக் காப்பியடித்து, ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் போட்டிருப்பார்கள். அந்த கிளைமேட்டுக்கு அது ஒத்துவரும். இங்கே ஒத்துவருமா? இதேபோலப் பல விஷயங்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதை 90களிலிருந்து தான் அதிகம் பார்க்கிறேன். அப்போதெல்லாம் , பஸ் ஸ்டாண்டுகளில் நீண்ட பெஞ்சுகளைத்தான் வைத்திருப்பார்கள்.

இப்படி காப்பியடிக்கும் இவர்கள் நல்ல விஷயங்களையும் காப்பியடிக்கலாமே? அதெல்லாம் செய்ய மாட்டார்கள். எந்த பஸ்ஸும் மக்கள் ஏற வசதியாக நிறுத்தத்துக்கு அருகில் நிற்காது. மக்களுக்கும் வரிசையாக ஏறும் பழக்கம் கிடையாது. வரிசை என்ற விஷயமே இவர்களுக்குப் பிடிப்பதில்லை. விமான நிலையத்திலும் இதைப் பார்க்கலாம். தங்களுடைய சீட்டை யாரும் பிடித்துக்கொள்ள மாட்டார்கள் என்று நன்றாகத் தெரிந்திருந்தாலும், வரிசையைப் பின்பற்ற மாட்டார்கள்.

**நகரத்தின் போக்கு வரத்துப் பிரச்சினை பற்றி என்ன நினைக்கிறீகள்?**

அரசுப் போக்குவரத்து ரொம்ப பலவீனமாக உள்ளது. 1980கள் வரை இந்த அளவு பலவீனமாக இல்லை. இது பலவீனமாக இருப்பதால், தனியார் வாகனங்களைக்

கொண்டுதான் மக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டது. அதனால்தான் வாகனங்கள் பெருகத் தொடங்கின. போக்குவரத்தில் ஏற்பட்ட பிரச்சினை மற்ற விஷயங்களையும் பாதிக்கத் தொடங்கியது. நகர மையத்திற்குள் ஆறு ஏழு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் வாழ முடியாது என்ற நிலை நடுத்தர வர்க்கத்திற்கு ஏற்படத் தொடங்கியது. ஏழு கிலோமீட்டர் சுற்றளவுக்குள் புதிதாக வீடு வாங்க முடியாது. அவ்வளவு வாடகை கொடுத்து வாழ்வது சாத்தியமில்லாததாக மாறிவிட்டது. பலர் வெளியே போக வேண்டிய கட்டாயம். இதனால் நகரம் விரிவடைந்துவருகிறது. நகரின் மைய இடங்களான, சிந்தாதரிப் பேட்டை, நுங்கம்பாக்கம், புரசைவாக்கம், கீழ்ப்பாக்கம், மவுண்ட் ரோட், மைலாப்பூர், திருவல்லிக்கேணி, தி. நகர் போன்ற இடங்களில் குடியிருந்த நடுத்தர வர்க்கமும் கீழ்மட்ட நடுத்தர வர்க்கமும் நகரத்தை விட்டுத் தள்ளித் தள்ளிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

நடுத்தர வர்க்கத்தினரின் இடப்பெயர்ச்சி சென்னையின் கலாச்சாரத்தையும் பாதிக்கிறது. போக்கு வரத்து நிலவரங்கள் இவ்வளவு மோசமாக இருப்பதால், சபாக்களில் நிகழ்ச்சிகளைப் பார்த்துவிட்டு, மீண்டும் வீட்டிற்குச் செல்வது மிகவும் பிரச்சினைக்குரியதாக இருப்பதால், நிறைய பேர் அடிக்கடி சபாக்களுக்குப் போவதில்லை. சென்னையில் சபா அமைப்புகள் சீர்குலைந்ததற்கு இதுவும் ஒரு காரணம். 1970 முதல் 80கள் வரை 100லிருந்து 150 சபாக்கள் நன்றாக நடைபெற்றுவந்தன. இப்போது, அதைவிட ஒன்றரை மடங்கு மக்கள் தொகை கூடியிருக்கிறது. அதற்கேற்றாற் போல ஒன்றரை மடங்கு சபாக்களும் அதிகரித்திருக்க வேண்டுமே? ஆனால், ஏற்கெனவே இருந்த பல சபாக்கள் இப்போது இயங்கவில்லை. வருடம் முழுவதும் இசை கேட்கவும் நாடகங்கள் பார்க்கவும் வந்துகொண்டிருந்த கூட்டம் சென்னையின் மையத்தை விட்டு எங்கெங்கோ போனதுதான் இதற்குக் காரணம்.

நாடகங்களுக்கு, சபாக்களுக்கு, தியேட்டர்களுக்குப் போவது போன்றவை படிப்படியாகக் குறைந்து விட்டதற்கு டி.வி. வந்துவிட்டதும் ஒரு காரணம் என்று சொல்லலாம்.

**அடித்தட்டு மக்களை நகரை விட்டு வெளியேற்றும் நிலை இருக்கிறதே...**

நடுத்தர வர்க்கம் தன் மனசாட்சியை இழந்து வருவதுதான் இதற்குக் காரணம். எம்.எஸ். சுப்புலட்சுமி தன் கடைசிக் காலத்தில் எழுத்தாளர் வாஸந்திக்கு அளித்த பேட்டி ஒன்றில் ஒரு விஷயம் கூறியிருந்தார். நம்மைச் சுற்றியுள்ள விஷயங்கள் மோசமாக இருக்கிறது என்று தெரிகிறது, ஆனால் அதற்கு நாம் என்ன செய்வது என்று தெரியவில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார். அடுத்து அவர் சொன்னதுதான் மிகவும் முக்கியமானது. நம்மைச் சுற்றி நம்முடனே சிலர் இருக்கிறார்கள், குறைந்தபட்சம் அவர்களையாவது கஷ்டப்படாமல் பார்த்துக் கொள்ளலாம் என்றார். ஒரு தனிமனிதனாக நான் என்ன செய்ய முடியும்? நம் வீட்டிற்குப் பாத்திரம் தேய்க்க வருபவர்கள், பெருக்க வருபவர்களின் துக்கத்திலாவது நாம் பங்கெடுத்துக் கொள்ளலாம். இந்த உணர்வு நடுத்தர வர்க்கத்தினருக்கு முன்பு இருந்தது. அவர்கள் எங்கிருந்து எப்படி வருகிறார்கள் ? அவர்கள் இடம் மாறுவது எதற்காக? அதனால் வரக்கூடிய பிரச்சினைகளை எப்படி சமாளிப்பார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நிறைய பேர் அலட்டிக்கொள்வதே இல்லை. 'வேலைக்காரி

செம்மஞ்சேரிக்குப் போகிறாளாம். வேறு ஆளைப் பார்" என்று சொல்லி விட்டு அதைக் கடந்து சென்றுவிடுபவர்களே அதிகம். வேலைக்காரி எதற்காக அங்கே போகிறாள்

என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூட விரும்பாத மன நிலைதான் இப்போது காணப்படுகிறது. இதன் விளைவுகளாக இப்படி இடம் மாறிப் போகிறவர்களுக்கு எங்கிருந்தும் ஆதரவு கிடைப்பதில்லை. நிர்வாக அமைப்புகளின் ஆதரவும் இருப்பதில்லை. அவர்களுக்கு இருப்பது இரண்டே இரண்டு வழிகள் தான். ஒன்று ஏதாவது அரசியல் குண்டர்கள் பின்னால் போக வேண்டும், அல்லது குற்றப் பாதையில் நுழைய வேண்டும். இத்தகைய நிலைக்கு அவர்களைத் தள்ளுவது இந்த நிர்வாகத்தின் தவறான முடிவுகள்தான்.

சென்னையும் நானும்-புத்தகத்திலிருந்து,
**2012**